கட்டளை இலக்கம் 09

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்

### பிரிவு 10 (1) (ஆ) (ii) இன் கீழ் விடுக்கப்பட்டுள்ள கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தினால் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை விடுக்கும் கட்டளையாவது :

2000 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கூட்டிணைக்கப்பட்ட சட்டத்தின்படி நிறுவப்பட்ட அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையினால் எழுத்தில் "ஹலால்" என உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாவிட்டால் எந்த உற்பத்தியாளரோ, விற்பனையாளரோ, விநியோகத்தரோ "ஹலால்" என்ற சொற் பதத்தை அல்லது அத்தகைய அர்த்தத்தைக் கொடுக்கும் விளக்கப் படத்தை அல்லது அடையாளத்தை கொண்ட உணவு வகை அல்லது குளிர்பான வகையை உற்பத்தி செய்யவோ, விற்பனை செய்யவோ, விநியோகம் செய்யவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனைக்கிடவோ முடியாது என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை இத்தால் கட்டளையிடுகிறது.

இக்கட்டளை 2007 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஆணைப்படி,

சரத் விஜேசிங்க,
தலைவர்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை,
இல. 27, வொக்சோல் வீதி,
கொழும்பு 02.
2006, திசெம்பர் 13.

12-837/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.